**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.527/2024 |
| Deposition of witness for Prosecution | : | P.W–1 |
| Name | : | அய்யாசமி, வயது 39 |
| Father Name/Husband Name | : | நல்லையா |
| Village | : | கோவில்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | தலைமை காவலர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th day of June 2025.

**(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்.)**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் உள்ளேன். கடந்த 09.11.2024 ஆம் தேதி மதியம் 01.00 மணிக்கு ஆய்வாளர் அவர்களின் உத்தரவின்பெயரில் நானும், உதவி ஆய்வாளர் சண்முகம், முதல் நிலை காவலர் கணேசன், மதுவிலக்கு சம்பந்தமாக எட்டயபுரம் ரோட்டில் ரோந்து சென்று கொண்டிருந்தோம். அப்போது உதவி ஆய்வாளர் அவர்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி மூக்கரை விநாயகர் கோவில் அருகே சந்தேகத்துக்கு இடமாக கையில் வெள்ளை நிற பையுடன் நின்று கொண்டிருந்த நபர் எங்களை பார்த்தவுடன் அங்கிருந்த ஓட முயன்றவரை நிறுத்தி விசாரித்தபோது, தான் சண்முகநகரை சேர்ந்த சுப்பையா மகன் அலெக்சாண்டர் என்று கூறினார்.
2. அவர் வைத்திருந்த பையை வாங்கி பார்த்த போது அதில் 180ML Black pearl பிராந்தி 2, 180ML Vorien பிராந்தி இரண்டு பாட்டில்கள் மற்றும் மது பாட்டில்கள் விற்று வைத்திருந்த பணம் 200 ரூபாய் இருந்ததது. அதைப் பற்றி விசாரித்தபோது இலாப நோக்குடன் அரசு அனுமதியின்றி மதுபாட்டில்கள் விற்றதாக கூறி மேற்படி சொத்துக்களை உதவி ஆய்வாளர் அவர்கள் அத்தாட்சியில் கைப்பற்றினார். அந்த அத்தாட்சியில் தனிநபர்கள் யாரும் கையெழுத்து செய்ய முன்வராததால் நானும், முதல்நிலை காவலர் கணேசனும் கையொப்பம் செய்தோம். மேற்படி நபர்

மற்றும் வழக்கு சொத்துக்களை நிலையம் கொண்டுவந்து வழக்கு பதிவு செய்ய உதவி ஆய்வாளர் அவர்களுக்கு உதவியாக இருந்தேன். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**</u>

3.உதவி ஆய்வாளருக்கு ரகசிய தகவல் கிடைத்தா என்றால் உதவி ஆய்வாளருக்கு கிடைத்தது. நாங்கள் ரோந்து பணிக்கு சொந்த வாகனத்தில் சென்றோம். எங்களுக்கு பாக்கெட் டைரி உண்டு. அதைப்பார்த்தால் ரோந்து பணிக்கு சென்றோமா, பாதுகாப்பு பணிக்கு சென்றோமா என்ற விபரம் துலங்கும். பாக்கெட் டைரியை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவம் இடம் எட்டயபுரம் – கோவில்பட்டி செல்லும் ரோட்டிற்கு வடக்கு பக்கம் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு வடக்குபக்கம் மூக்கரை பிள்ளையார் கோவில் உள்ளது என்றால் சரிதான்.

4. சம்பவ இடத்திற்கு கிழக்கே வெங்கடாஜலபதி ரைஸ்மில் உள்ளது என்றால் சரியல்ல. மூக்கரை பிள்ளையார் கோவிலுக்கு மேற்கே நிறைய கடைகள் உள்ளது என்றால் காம்பளக்ஸ் உள்ளது. காம்பளக்ஸ் கடை இருப்பதால் பொதுமக்கள் வந்து செல்வார்கள் என்றால் சரிதான். எதிரியை விசாரித்தபோது மதுபாட்டில்களை எதிரி எந்த கடையில் வாங்கினார்கள் என்று கேட்டீர்களா என்றால் உதவி ஆய்வாளர் கேட்டார். பொதுவாக ஒவ்வொரு மதுபான கடை மதுபாட்டில்களுக்கு invoice கொடுப்பார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த invoice ல் ஒவ்வொரு மதுபாட்டில்களின் எண்கள் இருக்கும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

5. பொதுவாக ஒரு தனிநபர் அவரது தேவைக்கு 3 1/2 லிட்டர் மதுபானம் வைத்து கொள்ளலாம் என்றால் சரியல்ல, 2 லிட்டர் வைத்து கொள்ளலாம். நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எதிரியை பிடித்து மதுபாட்டில்களை கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. நான் உண்மையில் ரோந்து பணிக்கு சென்று இருந்தால் பாக்கெட் டைரியை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து இருப்பேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.